மாற்றப்பட்டு, அதற்கேற்ப சம்பந்தப்பட்ட அமைச்சரால் அளிக்கப்பட்டுள்ள விடைகள் அவைமுன் வைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 30—4—1993 அதாவது இன்றைய தேதிய நடவடிக்கைக் குறிப்புகளில் இடம் பெறவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்களுக்கு இங்கே டேபிளில் வைக்கப்படவில்லை. லைப்ரரியில் வைக்கப் பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அது எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தால் அவைகளுடைய பதில்களை நாங்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பிரிண்ட் ஆன வுடன் உங்களுக்கு வழங்கப்படும். அதைத்தான் நான் உங்களுக்கு ஏற்கெனவே சொன்னேன். இதிலே நடைமுறைச் சிக்கல் இருக்கிற காரணத்தாலே பேரவைமுன் டேபிளிலே வைக்கப்படவில்லை. நூலகத்திலே வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி நூலகத்திலே வைக்கப்பட்டுள்ளவற்றின் நகல்கள் ஒவ்வொன்றும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பெறும். உங்கள் கையிலே இப்போது இல்லையே தவிர, அது உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

4. உரிமைப் பிரச்சினைகள்— தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ், சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் வெளியார் சிலரால் தாக்கப்பட்டது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் வெளியார் சிலரால் தாக்கப்பட்டது குறித்து 12—3—1993 அன்று திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இன்னும் 17 சட்டமன்ற உறுப்பினர்களும் பேரவை விதி 219-ன் கீழ் ஒரு உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பியிருந்தார்கள். அப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி 31—3—1993 ஆம் நாளுக்குள் குழுவின் அறிக்கையை அவைக்கு அளிக்க வேண்டுமென்று திரு. சோ. இராசாராமன் அவர்களும் ஒரு கடிதம் கொடுத்து இருந்தார்கள்.

இப்பிரச்சினை குறித்து 12—3—1993 அன்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அவையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்கள் :

''காவல் துறை தகவல் எனக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மீது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதில் ஒருவர் சுதாகோபால் என்று அடையாளம் கண்டு கொள்ளப்பட்டுள்ளது. மற்றவர்கள் யார் என்ற விவரம் இதுவரையில் கிடைக்கவில்லை. என்னிடத்தில் இல்லை. எனவே சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சட்டமன்ற உறுப்பினர்கள் வளாகத்தில் ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தெரிவித்தபடி உறுப்பினர்களுக்குத் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். இனிமேல் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் எல்லா ஏற்பாடுகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.''

இப்பிரச்சினை குறித்து காவல் துறையின் பூர்வாங்க அறிக்கையினையும், திரு. சுதாகோபால் அவர்களிடமிருந்து பெறப்பட்ட விளக்கத்தினையும் இச்செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு காவல் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். காவல் துறை இயக்குநர் அவர்கள் இதுகுறித்து அனுப்பிய பதிலில் 12—3—1993 அன்று காலை சுமார் 7-10 மணியளவில் உறுப்பினர் திரு. எஸ். பீட்டர்அல்போன்ஸ் அவர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த வேறு சில பேரவை உறுப்பினர்களோடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் விடுதி வளாகத்திற்குள் வந்து கொண்டிருக்கும்போது அவரைத் திடீரென்று மூன்று நபர்கள் கைகளாலும் தடிகளாலும் தாக்கினர் என்றும், திரு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தன்னுடைய கைப்பெட்டியைக் கொண்டு அவர்களின் தாக்குதலைத்தடுக்க முயன்றபோது அம்மூவரில் ஒருவர் அவரது முகத்தில் அடித்துவிட்டார் என்றும், உடன் இருந்த மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மேற்படி மூவரையும் பிடிக்க முயன்றபோது, அவர்கள் தப்பி ஓடிவிட்டனர் என்றும், திரு பீட்டர் அல்போன்ஸ் தப்பி ஓடிய மூவரில் ஒருவர் திருநெல்வேலியைச் சார்ந்த சுதாகோபால் என்று அடையாளம் தெரிந்து கொண்டார் என்றும், வெளிக் காயம் ஒன்றும் இல்லாததால் அவர், சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் செல்லவில்லை என்றும் தெரிவித்திருந்தார் மேலும் இது தொடர்பாக அரசினர் தோட்டம் டி. 7 காவல் நிலையக் குற்ற எண். 13/93, 341,323 பிரிவுகளின் கீழ் 506(2) இந்தியத் தண்டனை குற்றவியல் சட்டத்தின்படி ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், புலன் விசாரணையின்போது 12—3—1993 அன்று இரவு காவல் துறையினர் சுதாகோபால், ஏ. சங்கரலிங்கம் மற்றும் செந்தில் இ. கணபதி என்ற மூன்று பேரைக் கைது செய்து 13—3—1993 அன்று எழும்பூர் 13-வது மாநகர குற்றவியல் நீதிபதியின் உத்தரவின்படி நீதிமன்றக் காவலுக்கு அனுப்பினர் என்றும் தெரிவித்திருந்தார்.

13— 3—1993 ஆம் தேதியிடப் பெற்ற 11-வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் ரிமாண்டு அறிக்கையின்படி சுதாகோபால் என்பவர் கோர்ட்டில் (ரு மனுவைத் தாக்கல்

செய்துள்ளதாகவும் அந்த மனு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11-55

திரு. சுதாகோபால் கோர்ட்டில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:

''என்மீது குற்றம் சுமத்தியுள்ள தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களை எனக்கு கடந்த 10 ஆண்டுகாலமாக நன்கு தெரியும். அவர் காங்கிரஸ் கட்சியில் மிகவும் செல்வாக்கு உடையவர் என்பதும் எனக்குத் தெரியும். இந்த அடிப்படையில் அவர் மூலமாக அவர் செல்வாக்கைப் பயன்படுத்தி நெல்லையில் எனக்கு ஒரு கேஸ் ஏஜென்சி எடுத்து நடத்தலாம் என்று விரும்பினேன், அதன்பேரில் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னால் திரு. பீட்டர் அல்போன்ஸ் எம்.எல்.ஏ. அவர்களை குற்றாலம் சுற்றுலா மாளிகையில் தனியாகச் சந்தித்து 'கேஸ் ஏஜென்சி' எடுத்துத் தரும் விஷயம் பற்றிக் கேட்டேன். அவர் இதற்கு அதிகமாகச் செலவாகுமே, உங்களால் முடியுமா? என்று கேட்டார். நான் எவ்வளவு செலவாகும் என்று கேட்டேன். மொத்தம் மூன்று லட்சம் தர வேண்டும். முதலில் ஒரு லட்சம் அட்வான்சாகத் தர வேண்டும். மீதியை பின் காரியம் முடித்துக் கொடுத்தவுடன் பாக்கி 2 இலட்சம் தரவேண்டும் என்றார். நானும் சரி என்று சம்மதித்துவிட்டு, நெல்லைக்குத் திரும்பி விட்டேன். பின்பு சுமார் 20 தினங்கள் கழித்து பீட்டர் அலபோன்ஸ் எம்.எல்.ஏ., அவர்களை நெல்லை வண்ணாரப் பேட்டை காங்கிரஸ் கமிட்டி அலுவலகம் அருகில் வைத்து சந்தித்து ரூ. 1 லட்சத்தை, கேஸ் ஏஜென்சி வாங்கித் தருவதற்காகக் கொடுத்தேன். இரண்டு மாதத்தில் வாங்கித் தருகிறேன் என்றும், அதற்கான விண்ணப்பப் படிவங்கள், பிற செய்முறைகளை நானே செய்துவிடுகிறேன் என்றும், நீங்கள் கையெழுத்து மட்டும் போட்டால் போதும் என்றும் சொன்னார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். ஆனால்ஆறு மாத காலம் ஆகியும் அவர் எனக்கு கேஸ் ஏஜென்சி எடுத்துத்தர வேண்டிய எந்த முயற்சியும் செய்யவில்லை. இந்த அடிப்படையில் அவர் என்னை ஏமாற்றுகிறார் என்று புரிந்துகொண்டேன். இதனால் எனது பணம் ஒரு லட்சத்தைத் திருப்பித் தாருங்கள் என்று பலமுறை அவரது வீட்டிலும் நெல்லைக்கு வந்த இடத்திலும் கேட்டேன், தருகிறேன் தருகிறேன். என்று என்னை ஏமாற்றி கொண்டே இருந்தார். திரு. செல்லபாண்டியன் முன்னாள் சபாநாயகர், இறந்த அன்று திரு. பீட்டர் அல்போன்ஸ் நெல்லையில் சந்தித்து மீண்டும் பணத்தைக் கேட்டேன். அதற்கு அவர் சென்னைக்கு 12-ஆம் தேதி வருகிறேன்; அங்கு பாருங்கள் என்று சொன்னார். நானும் அவரை சட்டமன்ற விடுதியில்

சந்தித்துப் பணத்தைக் கேட்டேன். மீண்டும் சாக்கு போக்கு சொன்னார். நானும் கோபப்பட்டு சப்தம் போட்டுவிட்டு புறப்பட்டேன். அப்போது அவர் என்னைப் பார்த்து பணமே வாங்க முடியாத அளவிற்கு நான் செய்கிறேனா, இல்லையா பார்'' என்று என்னைப் பார்த்து உறுமினார். நானும் உங்களிடம் என்னுடைய பணத்தை வாங்காமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்பு மாலைப் பத்திரிகையில் செய்தியைப் பார்த்ததற்குப் பின்புதான் என் மீது என்பணத்தை மோசடி செய்வதற்காக பொய்ப் புகார் கொடுத்திருப்பது தெரிய வந்தது. எனக்கும் அவர் கூறியுள்ள புகாருக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. பின்பு என் நண்பனைப் பார்ப்பதற்கு எக்மோரில் உள்ள பாண்டியன் ஹோட்டலுக்குச் சென்றபோது நேற்று மாலையில் காவல் துறையினர் என்னைக் கைது செய்தனர்.

இது வழக்கு மன்றத்தில் அந்த சுதாகோபால் என்பவர் கொடுத்துள்ள வாக்குமூலம். அது இந்த வழக்கினுடைய மனுவோடு சேர்ந்து பதிவு செய்யப்பட்டிருப்பதாக வழக்கு மன்றத்திலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எழுப்பியுள்ள அவை உரிமை மீறல் பிரச்சினையை கோர்ட்டில் சுதாகோபால் தாக்கல் செய்துள்ள மனுவோடு சேர்த்துப் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது.

இதுபோன்று கிரிமினல் சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் விசாரிக்க வேண்டிய பிரச்சினைகளில், வழக்கு மன்றங்கள்தான் நேரடியாக விசாரித்துத் தக்க தண்டனை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

எழுந்துள்ள பிரச்சினைகள் ஒன்றையொன்று சார்ந்திருப்பதாகவும் உள்ளன. எனவே, இவை முழுக்க முழுக்க நீதி மன்ற விசாரணைகளுக்கு உட்பட்டவையாகவே அமைகின்றன.

எந்த ஒரு பிரச்சினையும் நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருக்கும்போது சட்டமன்றப் பேரவை அதில் தலையிடுவது இல்லை. அதைப் போன்றே, சட்டமன்றப் பேரவையில் ஒரு பிரச்சினை பரிசீலனையில் இருக்கும்போது நீதிமன்றம் அதில் தலையிடுவது இல்லை. இது காலம் காலம் தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு மரபு ஆகும். 26—2—1982 ஆம் தேதியன்று உறுப்பினர் விடுதியில் அந்நாளைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் தாக்கப்பட்ட பிரச்சினை குறித்து அவையில் எழுப்பப்பட்ட போது, அச்சம்பவம் பேரவை உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. பிரச்சினை, பேரவை உரிமைக் குழுவின் விசாரணையில் இருந்த காரணத்தால் நீதிமன்ற விசாரணை

நடத்த இயலாது போனதை குழு தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் அப்பிரச்சினையில் அவை உரிமை மீறல் என்பதைத் துல்லியமாக நிரூபிக்க இயலவில்லை எனவும் முடிவெடுத்து, அப்பிரச்சினை அன்றைய உரிமைக் குழுவால் கைவிடப்பட்டுள்ளது.

அன்றைய உறுப்பினர் திரு. தீர்த்தராமன் பிரச்சினை போன்றே தற்போது பரிசீலனையில் இருக்கும் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தாக்கப்பட்டது குறித்த சம்பவமும் உள்ளது. சம்பவம் நடைபெற்ற அன்றே காவல் துறையால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், அப்பிரச்சினை சட்டமன்றப் பேரவையிலும் எழுப்பப்பட்டது. இன்றைய நிலவரப்படி இந்த வழக்கு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது நீதிமன்றத்தில் கைது செய்யப்பட்டு நிறுத்தப்பட்ட சுதாகோபாலும் திரு. பீட்டர் அல்போன்சுக்கு எதிராக ஓர் குற்றச்சாட்டைத் தாக்கல் செய்துள்ளார். அதுவும் நீதிமன்றத்தில் குற்றவியல் தகவல் அறிக்கையோடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் வழக்காகப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ள நிலையில் பேரவையும் இப்பிரச்சினயை ஆராய்ந்து நீதிமன்ற விசாரணையைத் தடைப்படுத்துவதாகவே அமையும். மேலும் மேற்கண்ட மாறுபட்ட தகவல்களில் இருந்து இப்பிரச்சினை அவை உரிமை மீறல் தான் என உறுதிபடக் கூறிட இயலாத நிலை உள்ளதால் இதனை அவை உரிமை மீறல் என வகைப்படுத்த இயலாது எனத் தீர்ப்பளிக்கிறேன். எனினும் பேரவையில் கலந்து கொள்வதற்காக வரும் ஒரு உறுப்பினரைத் தாக்குவது என்ற செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதைத் தெரிவிப்பதோடு நீதிமன்றம் இதனை உரியவாறு விசாரித்துத் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் இந்தப் பிரச்சினை இத்தோடு விடப்படுகிறது.

நண்பகல் 12-00

8. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. செ. கு. தமிழரசன், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் சார்பாக அளிப்பார்கள்.